# யாழ்ப்பாணப் பொதுசன நூலக எண்ணிமவாக்கல் செயற்றிட்டம் அறிக்கை 2025

| | |
|---|---|
| செயற்றிட்டத் தலைப்பு | யாழ்ப்பாணப் பொதுசன நூலக எண்ணிமவாக்கல் செயற்றிட்டம் |
| செயற்றிட்ட எண் | NF/PG/2022/0003 |
| செயற்றிட்ட இடம் | யாழ்ப்பாணம் - இலங்கை |
| செயற்றிட்டக் காலம் | 2023 பங்குனி -2026பங்குனி |
| அறிக்கையிடல் காலம் | 2025 பங்குனி - 2025 டிசம்பர் |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | Manitha Neyam Trust |
| முக்கிய பங்குத்தாரர்கள் | யாழ்ப்பாணப் பொதுசன நூலகம் |
| செயற்றிட்டச் செலவுகள் | 2,645,235 ரூபா |

செயற்றிட்டச் சுருக்கம்
நூலக நிறுவனம் பல்வேறு விதமான செயற்றிட்டங்களுக்கூடாக ஈழத்து தமிழ் பேசும் சமூகங்களினுடைய ஆவணங்களை ஆவணப்படுத்தும் செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றது. அதிலும் கடந்த காலங்களில் யாழ்ப்பாண பொதுசன நூலகத்திலும் பல ஆவணங்களை பெற்று எண்ணிமப்படுத்தியிருக்கிறது.

இச்செயற்றிட்டத்தின் ஊடாக ஏற்கனவே நூலக நிறுவனத்தால் ஆவணப்படுத்தப்பட்ட பத்திரிகைகள், சஞ்சிகைகள் தவிர்ந்த ஏனைய பத்திரிகைகள், சஞ்சிகைகளை இனங்கண்டு ஆவணப்படுத்தல் செயற்பாட்டினை மேற்கொள்ளுதல் முக்கியமானதாக கருதப்பட்டது. இச்செயற்றிட்ட செயற்பாடுகளை இரு வருடங்கள் எண்ணிமப்படுத்தி பதிவேற்றுவதால் குறிப்பிட்ட காலப்பகுதியில் 400,000+ பக்கங்கள் இணையவழியில் திறந்த அணுக்கத்தில் பெறத்தக்கதாக இருக்கும்.

செயற்றிட்ட இலக்கு
பொதுசன நூலகத்திலுள்ள இலங்கை சார்ந்த பழைய அரிதான ஆவணங்களை அடையாளப்படுத்தி, பட்டியலிட்டு, பணியாளர்களை பயிற்சியளிப்பதனூடாக ஆவணங்களை மின்வருடல் செயன்முறை மூலம் இணையவழியில் திறந்த அணுக்கத்திற்கு பதிவேற்றம் செய்தல்.

செயற்றிட்ட நோக்கங்கள்

• மூன்று வருட காலப்பகுதிக்குள் எண்ணிமப்படுத்தப்பட வேண்டிய பொதுசன நூலகத்திலுள்ள ஆவணங்களை அடையாளப்படுத்தப்படுத்தி, ஆவணப்படுத்தி இரு நிறுவனங்களுக்கும் இடையில் ஆவணங்களைப் பகிர்தல்.

• இரு நிறுவனப்பணியாளர்களும் இவ் ஆவணப்படுத்தல் மற்றும் மின்வருடுதல் சார்ந்த எண்ணிம நூலக செயற்பாடுகளில் ஓர் தெளிவினை பெற்றுக்கொள்ளுதல். குறிப்பாக மூன்று மாதங்களில் பொதுசன நூலகம் சார்ந்த இரு பணியாளர்கள் முழுமையான பயிற்சிகளை பெற்றுக் கொள்ளுதல்.

• எமது செயற்றிட்ட செயற்பாடுகளை மூன்று வருடங்கள் எண்ணிமப்படுத்தி பதிவேற்றுவதால் குறிப்பிட்ட காலப்பகுதியில் 259,000 பக்கங்கள் இணைய வழியில் திறந்த அணுக்கத்தில் பெறத்தக்கதாக இருக்கும்.

**2025** ஆம் ஆண்டு அடைவுகள்

| | | இலக்கு | அடைவுகள் |
|---|---|---|---|
| 1.1 | மின்வருடப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை | **2,300** | **748** |
| 1.2 | மின்வருடப்பட்ட பக்கங்களின் எண்ணிக்கை | 172,800 | 113,522 |
| 1.3 | மீள் சரிபார்க்கப்பட்ட ஆவணப்பக்கங்களின் எண்ணிக்கை | 2,300 | 712 |
| 1.4 | மின்வருடப்பட்ட ஆவணங்களின் மீதரவுப் பட்டியல் | 2,300 | 738 |
| 1.5 | வலைத்தளத்தில் பதிவேற்றப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை | 2,300 | 738 |

மொத்த அடைவு மட்டம்

| | ஆவணங்கள் | அடைவுகள் |
|---|---|---|
| 1 | மருத்துவம் மற்றும் நலவியல் | 02 |
| 2 | தமிழ், ஆங்கில இலக்கியம் | 56 |
| 3 | சமயம் சார் நூல்கள் | 48 |
| 4 | வரலாறு | 101 |
| 5 | அரசியல் | 24 |
| 5 | சட்டவியல் | 61 |

| | | |
|---|---|---|
| 6 | சமூகவியல் | 49 |
| 7 | மலர்கள் | 4 |
| 8 | அறிக்கைகள் | 423 |

எதிர் கொண்ட சவால்கள்

.

- பொதுசன நூலகத்தில் உள்ள புத்தகங்கள் பல எண்ணிமப்படுத்துவதற்கு சவாலாக உள்ளன. அதாவது இந்நூல்களை கட்டு பிரித்து எண்ணிமப்படுத்தி மீண்டும் சேர்த்துக் கட்டி கொடுக்க வேண்டும். இச் செயன்முறைக்கு பொதுசன நூலக முகாமைத்துவம் அனுமதி அளிக்கவில்லை. இதனால் புகைப்பட கருவியினூடாக இவ் புத்தங்களை எண்ணிமப்படுத்த வேண்டிய தேவையுள்ளது.
- பொதுசன நூலகத்தில் செயற்றிட்டம் இடம்பெற்று வந்த அறை வேறு இடத்திற்கு மாற்றப்பட்டமையால் போதிய இடவசதி இல்லாமை சவாலாக உள்ளது.
- இச் செயற்றிட்டத்தின் ஒரு நோக்கமாக உள்ள பொதுசன நூலக பணியாளர்களுக்கு பயிற்சி வழங்கலானது அடையப்படாத ஒன்றாக காணப்படுகிறது. இவ் செயற்றிட்டத்திற்கு பொறுப்பான பணியாளர் தொடர்ச்சியாக மாற்றம் பெறுவதன் காரணத்தால் பணியாளர்களுக்கு பயிற்சி வழங்க முடியாது உள்ளது.

கற்றல்களும் பரிந்துரைகளும்

- பொதுசன நூலக பணியாளர்களின் பயிற்சி தொடர்பாக பொதுசன நூலகத்தின் நூலகர் மற்றும் செயற்றிட்டப்பணியாளர்களுடன் இணைந்து தீர்வு காணப்பட வேண்டும். இவ் நோக்கானது செயற்றிட்டத்தின் தொடர்ச்சி தன்மையை உறுதிப்படுத்தும் ஒன்றாகும்.
- செயற்றிட்ட செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான போதியளவு இடவசதி உள்ள அறையினை வழங்குதல்.

பின்னிணைப்பு

[பொதுசன நூலகம்]